**2026.07.06 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. பேருந்துச் சேவையில் கொத்தணி (Bus Sector Clustering) முறைமையை அறிமுகப்படுத்தும் முன்னோடி வேலைத்திட்டம்**

எமது நாட்டில் பயணிகள் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முக்கிய போக்குவரத்து ஊடகமாக பேருந்துப் போக்குவரத்து அமைவதுடன், குறித்த சேவைகளை இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் சுயாதீன தனியார் பேருந்து இயக்குநர்கள் அதிகளவில் இயங்குகின்றனர். பயணிகளுக்கான பொதுப் போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் போது நீண்டகாலமாக இயங்கி வருகின்ற முறைமையால் அதிக போட்டித்தன்மை, திட்டவட்டமான நேர அட்டவணையை கடைப்பிடிப்பதிலுள்ள பலவீனம், வீதிகளில் அதிக பேருந்துகள் இயங்குகின்றமை, பேருந்துகளை இயக்குவதில் பாதுகாப்பற்ற நடத்தைகள், பயணிகள் எதிர்கொள்கின்ற சிரமங்கள், மோட்டார் வாகன நெரிசல், சேவையில் காணப்படுகின்ற சமநிலையற்றதன்மை மற்றும் வளங்களை வினைத்திறனற்ற வகையில் பயன்படுத்தல் போன்ற பிரச்சினைகள் பல மேலெழுந்துள்ளன. அவ்வாறான பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான தீர்வுகளாக உலகில் பல நாடுகள் பேருந்து தொழிற்றுறையில் கொத்தணி (Bus Sector Clustering) முறைமையை அறிமுகப்படுத்தி ஒரே பயணிகள் போக்குவரத்து வழித்தடமாகவோ அல்லது குறித்த பூகோளப் பிரதேசத்தில் இயங்குகின்ற பேருந்து சேவைகளை ஒருங்கிணைந்த முகாமைத்துவத்தின் கீழ் இயக்குவதாகும். ஒன்றுக்கொன்று தொடர்புபடுகின்ற வீதிகளில் பயணிக்கின்ற பேருந்துச் சேவைகள் தனித்தனி அலகுகளாக அல்லாமல், ஒருங்கிணைந்த சேவைக் கொத்தணியாக முகாமைத்துவம் செய்கின்ற முறைமையாக அமையும் பேருந்துச் சேவைகளை கொத்தணியாக்கல் முறைமையை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவது பயனுள்ள பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்கும், சமகால பேருந்துச் சேவையில் காணப்படும் பெரும்பாலான இயக்கங்கள் மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்கு இயலுமை கிட்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு, முதலாவதாக, பேருந்து சேவை இலக்கங்கள் 170, 177 மற்றும் 190 ஆகிய பேருந்து வழித்தடங்களில் சேவை கொத்தணியாக்கல் முன்னோடி வேலைத்திட்டத்திற்குரிய பங்காளர்களின் பங்கெடுப்புடன் அமுல்படுத்துவதற்கும், அதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் இவ்வேலைத்திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்கும் அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

**02. 2026 ஆம் ஆண்டின் உலக குடியிருப்பு தின நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்**

ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமை உலக குடியிருப்பு தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. வீடமைப்பு மற்றும் வாழ்விட அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள், மாற்றுத் தீர்வுகள் மற்றும் புதிய போக்குகள் தொடர்பாக அனைத்துப் பங்காளர்களின் கவனத்தைத் திருப்புவதற்கும், தேசிய மட்டத்திலான உரையாடலொன்றின் மூலம் அதுதொடர்பாக அனைத்துப் பங்காளர்களையும் தெளிவுபடுத்தல் மற்றும் குறித்த முயற்சிகளின் அனுகூலங்களை துரிதமாக அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டு உலக குடியிருப்பு தினம் கொண்டாடப்படுகின்றது. 2026 ஆம் ஆண்டின் உலக குடியிருப்பு தினம் ஒக்டோம்பர் மாதம் 05 ஆம் திகதி இடம்பெறுவதுடன், அதன் தொனிப்பொருளாக 'Adequate Housing for All' எனப் பிரகடப்படுத்தப்பட்டுள்ளது. உலக குடியிருப்பு தினத்தை உலகளாவிய ரீதியில் அமுல்படுத்தும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்பு வேலைத்திட்டத்தின் இலங்கைக்கான முகவராண்மை நிறுவனமாக வீடமைப்பு விடயதான அமைச்சு ஏனைய ஏற்புடைய அமைச்சுக்கள் மற்றும் அனைத்து நிறுவனங்களின்



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

பங்களிப்புக்களையும் பெற்றுக்கொண்டு இம்முறை உலக குடியிருப்பு தினத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்த 2026 உலக குடியிருப்பு தின நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. இராஜாங்கனை நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வலது கரை பிரதான கால்வாய் 3+685 கிலோமீற்றர் இடத்தில் தற்போது காணப்படுகின்ற நீர் வழித்தடக் கால்வாய்ப் பாலத்தின் (Road – Cum – Aqueduct) நிர்மாண அமைப்பைக் கட்டமைப்பு ரீதியாக சோதனை செய்வதற்கான மதியுரைஞர் சேவை ஒப்பந்தத்தை வழங்கல்**

இராஜாங்கனை நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வலது கரை பிரதான கால்வாய் 3+685 கிலோமீற்றர் இடத்தில் தற்போது காணப்படுகின்ற நீர் வழித்தடக் கால்வாய்ப் பாலம் (Road – Cum – Aqueduct) 1966 ஆம் ஆண்டில் இராஜாங்கனை நீர்த்தேக்கத்திலிருந்து புத்தளம், அநுராதபுர வீதியில் அமைந்துள்ள இராஜாங்கனை சந்தியுடன் இணைகின்ற வீதியுடன் ஒருங்கிணைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது. குறித்த நீர் வழித்தடக் கால்வாய் அமைக்கப்பட்டு 60 ஆண்டுகள் கடந்துள்ளமையால், தற்போது காணப்படுகின்ற ஒருங்கிணைந்த வீதி மற்றும் நீர் வழித்தடக் கால்வாய்ப் பாலம் மோசமாகப் பழுதடைந்துள்ளது. இந்நிலைமையின் கீழ் தற்போது நிலவுகின்ற வாகனப் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அங்கமுவ கால்வாய் ஊடாக வேறான புதியதொரு பாலமொன்றை நிர்மாணிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை உடன்பாடு தெரிவித்துள்ளதுடன், அவ்வாறு இல்லாவிடின், தற்போதுள்ள நீர் வழித்தடக் கால்வாய்ப் பாலத்தை மீள நிர்மாணித்தல் தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு துரிதமாகவும், விபரங்களுடன் கூடிய கட்டமைப்பு ரீதியான பகுப்பாய்வொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கமைய, குறித்த பகுப்பாய்வை மேற்கொள்வதற்கான மதியுரைஞர் ஒப்பந்தத்தை பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்திற்கு வழங்குவதற்கு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. 'ஸ்ரீலங்கா எக்ஸ்போ 2027' சர்வதேச கண்காட்சி**

'ஸ்ரீலங்கா எக்ஸ்போ 2027' சர்வதேச கண்காட்சி 2027.01.14 தொடக்கம் 2027.01.17 ஆம் திகதி வரை நடாத்துவதற்கு 2026.04.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியின் நிகழ்ச்சி முகாமைத்துவப் பணிகளுக்கு நிறுவனமொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கு 03 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனை பெறுகைக் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள விதப்புரைகளின் அடிப்படையில் கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய விலைமனுதாரரான Lanka Exihibition & Conference Services (Pvt) Limited (LECS) மற்றும் Aitken Spence Travels (Pvt) Ltd (ASTL) இடையிலான பங்காண்மைக்கு 178.71 மில்லியன் ரூபாய்களுக்கு (பெறுமதி சேர் வரி உள்ளிட்ட) வழங்குவதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. இலங்கையில் பல நாள் கடற்கலன்கள் மற்றும் ஒரு நாள் கடற்கலன்களுக்கான கண்காணிப்பு முறைமையை மேலும் விரிவாக்கம் செய்தல்**

சட்ட விரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடிக் கடற்கலன்களைப் பயன்படுத்தி மேற்கொள்கின்ற போதைப்பொருள் கடத்தல், மனித வியாபாரம் மற்றும் சட்ட விரோத பண்டங்கள் போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுத்தல்,

இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற நாடுகள் எதிர்கொள்கின்ற மோசமான பிரச்சினையாகவுள்ளது. இந்நிலைமையை தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிராந்திய ரீதியாக இலங்கை இந்து சமுத்திரத்தின் டுனா பேரவையின் உறுப்பினராவதுடன், இப்பேரவையின் சட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய, சர்வதேசக் கடலில் மீன்பிடியில் ஈடுபடுகின்ற அனைத்துக் கடற்கலன்களும் கடற்கலன் கண்காணிப்பு முறைமை மூலம் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படல் வேண்டும். தற்போது இலங்கையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற பதிவு செய்யப்பட்ட 5,200 பல நாள் கடற்கலன்களில், 4,200 கடற்கலன்களுக்கு அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற கண்காணிப்பு முறைமை உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. 2021.01.01 ஆம் திகதிக்குப் பின்னர் புதிதாகப் பதிவு செய்யப்படுகின்ற பல நாள் கடற்கலன்களில் கண்காணிப்பு தொகுதி கட்டாயமாகப் பொருத்தப்பட வேண்டியமையால், அன்று தொடக்கம் பதிவு செய்யப்படுகின்ற கடற்கல உரிமையாளர்கள் கண்காணிப்புத் தொகுதி உபகரணங்களைக் கொள்வனவு செய்து பொருத்திக் கொள்கின்றனர். 2021.01.01 ஆம் திகதிக்கு முன்னர் பலநாள் கடற்கலன்களாகப் பதிவு செய்யப்பட்டு உள்நாட்டு கடலிலும், ஒருசில சந்தர்ப்பங்களில் சர்வதேச கடலிலும் மீன்பிடியில் ஈடுபடுகின்ற கடற்கலன்களில் கண்காணிப்புத் தொகுதி இல்லாத 1,500 பல நாள் கடற்கலன்கள் மற்றும் ஒரு நாள் கடற்கலன்கள் காணப்படுகின்றன. அவற்றில், 34 அடி நீளத்திற்கும் அதிகமான நீளத்தில் 400 கடற்கலன்கள் எந்தவொரு வேளையிலும் சர்வதேச கடலில் மீன்பிடியில் ஈடுபடுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றது. மேலதிகமாகவுள்ள 1,100 கடற்கலன்களில் இயந்திரக் கொள்ளளவு மற்றும் எரிபொருள் கொள்ளளவுக்கமைய நீண்டகாலம் கடலில் இயக்குவதற்குப் போதியளவான தொழிநுட்பத் தகுதிகள் இல்லாத கடற்கலன்களாகும். அதற்கமைய, குறித்த 1,500 கடற்கலன்களுக்கும் கண்காணிப்புத் தொகுதியைப் பொருத்துவதைக் கட்டாயமாக்குவதற்கும், அதற்கான செலவை அரசு பொறுப்பேற்பதற்கும் கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. கண் சிகிச்சைகளின் பின்னர் பெட்ரிசிலோன் அசிடேட் மருந்து வழங்கப்பட்ட பின்னர் கண் பார்வையை இழந்த நோயாளர்களுக்கு நட்டஈடு வழங்கல்

2023.03.03 மற்றும் 2023.05.16 இற்கிடையிலான காலப்பகுதியில் பெட்ரிசிலோன் அசிடேட் கண்ணுக்கான திரவ மருந்து பயன்படுத்தியமையால் நுவரெலியா பொது மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சையை மேற்கொண்ட நோயாளர்கள் சிலருக்கு கண் பார்வையற்றுப் போதல் அல்லது தொடர்ந்து பார்வை குறைந்து சென்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், நுவரெலிய மாவட்ட பொது மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்ட பின்னர் கண் பார்வையை இழந்த 17 நோயாளர்களுக்கு இதுவரை நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக குறித்த காலப்பகுதியிலேயே நுவரெலிய மாவட்ட பொது மருத்துவமனை தவிர்ந்த ஏனைய மருத்துவமனைகளில் கண் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளும் போது பெட்ரிசிலோன் அசிடேட் திரவ மருந்துப் பாவனையால் கண் குறைபாடுகளுக்கு ஆளாகியுள்ள நோயாளர்களை சோதனை செய்து அறிக்கைப்படுத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ள விசேட தொழிநுட்பக் குழுவானது விழிப்புலனை இழந்துள்ள 04 நோயாளர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்கு விதந்துரைத்துள்ளது. அதற்கமைய, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு, குறித்த 04 நோயாளர்களுக்கு ஒரு மில்லியன் ரூபாய்கள் வீதம் நட்டஈடு செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ விடயதானத்தை விரிவாக்கம் செய்தல்

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையுடன் கையொப்பமிடப்பட்டுள்ள கடன் ஒப்பந்தத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 04 பக்கேஜ்களாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் காலப்பகுதி 2025.01.01 தொடக்கம் 2027.08.31 வரை

நீடிப்பதற்கும் 2026.01.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்ட விடயதானத்திற்கு பேராதனை பல்கலைக்ககழக வளாகத்தையும் உள்ளடக்குமாறு துணைவேந்தர் அவர்கள் முன்வைத்துள்ள வேண்டுகோளுக்கமைய சாத்தியவளக் கற்கையின் பெறுபேற்றுக்கமைய இப்பல்கலைக்கழகத்தின் விடயதானத்தையும் உள்ளடக்குவதற்கு இயலுமை உண்டெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்ட விடயதானத்தின் கீழ் பேராதனைப் பல்கலைக்கழகத்தை உட்சேர்ப்பதற்கும், அதற்கான மதிப்பீட்டுச் செலவான 2,000 மில்லியன் ரூபாய்களில் 800 மில்லியன் ரூபாய்களை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் கடன்தொகையாகவும், மற்றும் எஞ்சிய 1,200 மில்லியன் தொகையை உள்நாட்டில் ஏற்பாடு செய்வதற்கும், கருத்திட்டக் காலத்தை 2027.12.31 வரை மேலும் நீடிப்பதற்கும் வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல்**

உள்நாட்டு கைத்தொழிலாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில் உலோக உற்பத்திகள், பல்வேறு உலோகப் பொருட்கள் மற்றும் உலோகத் துண்டுகள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்படுவதைத் தடுப்பதற்காக அவ்வாறான பொருட்களின் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதைக் கட்டாயமாக்குவதற்கு 2026.03.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை வலுவாக்கம் செய்வதற்காக 2026 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2493/03 ஆம் இலக்க 2026.06.15 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச வர்த்தகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு முறையான, முற்கொடுப்பனவு முறையின் கீழ் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள், கொடுப்பனவு செலுத்தப்பட்ட திகதி தொடக்கம் குறித்த ஒழுங்குவிதி மூலம் விதிக்கப்பட்டவாறு 180, 365 அல்லது 730 நாட்கள் குறித்த காலப்பகுதியில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதென உறுதிப்படுத்துவதற்கான புதிய ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு இயலுமை கிட்டும் வகையில் 2012.01.02 ஆம் திகதிய 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிமங்கள் மற்றும் கொடுப்பனவு முறை ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்து, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2026 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் 2026.06.18 ஆம் திகதிய 2493/39 ஆம்இலக்க அதிவிசேட வரத்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. நன்னடத்தை ஆணையாளர் பதவிக்கு நியமித்தல்**

தற்போது வெற்றிடமாகவுள்ள நன்னடத்தை ஆணையாளர் பதவிக்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் பணிப்பாளராக (அபிவிருத்தி) கடமையாற்றுகின்ற இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தர அதிகாரியான யூ.எல்.மனீசா ஜினன்ஜலி ஜயதிலக்க அவர்கள் தகைமையுடையவரென அடையாளங் காணப்பட்டுள்ளார். அதற்கமைய, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தர அதிகாரியான யூ.எல்.மனீசா

ஜினன்ஜலி ஜயதிலக்க அவர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமிப்பதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் பணத்தூய்தாக்கல் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலத்திற்கு பாராளுமன்ற குழுநிலையில் திருத்தங்கள்**

நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் பணத்தூய்தாக்கல் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் 2026.02.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி தொடரப்பட்ட வழக்குக்கு உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்மானங்கள் மற்றும் அடையாளங் காணப்பட்டுள்ள அவசியமான திருத்தங்கள் ஒருசிலவற்றை உள்ளடக்கி இச்சட்டமூலம் தொடர்பான குழுநிலை அமர்வின் போது அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலங்கள் சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, குறித்த திருத்தச் சட்டமூலங்களை உரிய பாராளுமன்ற குழுநிலை அமர்வின் போது சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**